★ சிறந்த நடிகர் – சூர்யா ★ நடிகை – அபர்ணா பாலமுரளி ★ திரைப்படம் – சூரரைப் போற்று

# தமிழ் திரையுலகுக்கு 10 தேசிய விருதுகள்

## ‘சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்,’ ‘மண்டேலா’ – தமிழ் படத்துக்கும் விருது

புதுடெல்லி, ஜுலை.23

தேசிய திரைப்பட விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. சிறந்த நடிகராக சூர்யா தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

கடந்த 2020ம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட சினிமாக்களுக்கான 68வது தேசிய விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன.

தேசிய அளவில் சிறந்த படமாக ‘சூரரைப் போற்று’ தமிழ்ப்படம் தேர்வு செய்யப்பட்டது. நடிகர் சூர்யா கதாநாயகனாக நடித்திருந்தார். சுதா கொங்கரா, இயக்கி இருந்தார். இப்படத்துக்கு தங்கத்தாமரை விருதும், ரூ.2½ லட்சம் ரொக்கப்பரிசும் வழங்கப்படும்.

சிறந்த நடிகருக்கான தேசிய விருதுக்கு நடிகர் சூர்யாவும் (படம் சூரரைப் போற்று), நடிகர் அஜய் தேவ்கனும் (படம் தனாஜி:தி அன்சங் வாரியர்) கூட்டாக தேர்வு செய்யப்பட்டனர்.

விருதுக்கான வெள்ளித்தாமரையையும், ரூ.50 ஆயிரம் பரிசுத்தொகையையும் இருவரும் பகிர்ந்து கொள்வார்கள்.

சிறந்த நடிகையாக ‘சூரரைப் போற்று’ படத்தில் நடித்த அபர்ணா பாலமுரளி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த துணை நடிகராக ‘அய்யப்பனும் கோஷியும்’ மலையாள படத்துக்காக பிஜு மேனன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சிறந்த துணை நடிகையாக ‘சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்’ தமிழ் படத்துக்காக லட்சுமி பிரியா சந்திரமவுலி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த இயக்குனராக ‘அய்யப்பனும் கோஷியும்’ மலையாள படத்தை இயக்கிய சச்சிதானந்தன் தேர்வாகி உள்ளார். இவர் சில மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். சிறந்த ஜனரஞ்சக படமாக ‘தனாஜி: தி அன்சங் வாரியர்’ இந்திப்படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த இசையமைப்பாளர் விருதை (பின்னணி இசை) ‘சூரரைப் போற்று’ படத்துக்காக ஜி.வி.பிரகாஷ் குமாரும், ‘ஆல வைகுந்தபுரமுலு’ தெலுங்கு படத்துக்காக (பாடல்கள்) எஸ். தமனும் பெறுகிறார்கள்.

சிறந்த திரைக்கதைக்கான விருதை ‘சூரரைப் போற்று’ படத்துக்காக சுதா கொங்கரா, ஷாலினி உஷா நாயர் ஆகியோரும், வசனத்துக்கான விருதை ‘மண்டேலா’ தமிழ் படத்துக்காக மடோன் அஸ்வினும் பெறுகிறார்கள்.

தமிழில் சிறந்த படமாக ‘சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்’ தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த புதுமுக இயக்குனர் விருது, ‘மண்டேலா’ படத்தை இயக்கிய மடோன் அஸ்வினுக்கு வழங்கப்படுகிறது.

### சிறந்த இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ்




### நடிகர், நடிகைகளுக்கு மு.க.ஸ்டாலின் வாழ்த்து

தேசிய விருது பெற்ற நடிகர் நடிகைகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ‘டுவிட்டர்’ பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:– 68வது தேசிய திரைப்பட விருதுகள் விழாவில், விருதுகளை குவித்து தமிழ் திரையுலகுக்கு பெருமை சேர்த்துள்ள தம்பி சூர்யா, சுதா கொங்கரா, ஜி.வி.பிரகாஷ்குமார், அபர்ணா பாலமுரளி உள்பட ‘சூரரைப் போற்று’ படக்குழுவினருக்கும்,

டைரக்டர் வசந்த், லட்சுமி பிரியா சந்திரமவுலி, ஸ்ரீகர் பிரசாத் உள்ளிட்ட ‘சிவரஞ்சனியும், இன்னும் சில பெண்களும்’ படக்குழுவினருக்கும்,

மடோன் அஸ்வின், யோகிபாபு உள்ளிட்ட ‘மண்டேலா’ படக்குழு வினருக்கும் எனது பாராட்டுகள். அனைத்து விருதாளர்களுக்கும் வாழ்த்துகள். சமூக பொறுப்புணர்வு மிகுந்த முற்போக்கான படைப்புகள் திரையை ஆளட்டும்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

இதர விருதுகள் வருமாறு:

சிறந்த தெலுங்கு படம்: கலர் போட்டோ

சிறந்த மலையாள படம்: திங்களச்சா நிச்சயம்

சிறந்த கன்னட படம்: தொள்ளு

சிறந்த இந்தி படம்: துளசிதாஸ் ஜூனியர்

சண்டை இயக்கம்: அய்யப்பனும் கோஷியும்

நடன இயக்கம்: சந்தியா ராஜு (நாட்யம் – தெலுங்கு)

பாடலாசிரியர்: மனோஜ் முண்டாஷிர் (சாய்னா – இந்தி)

ஒப்பனை: ராம்பாபு (நாட்யம்–தெலுங்கு)

ஆடை வடிவமைப்பு: நச்சிகேத் பர்வே, மகேஷ் ஷெர்லா (தனாஜி:தி அன்சங் வாரியர் – இந்தி)

தயாரிப்பு நிர்வாகம்: அனீஸ் நாடோடி (கப்பெலா – மலையாளம்)

படத்தொகுப்பு: ஸ்ரீகர் பிரசாத் (சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும் – தமிழ்)

ஒளிப்பதிவு: சுப்ரதிம் போல் (அபிஜத்ரிக் – பெங்காலி)

பின்னணி பாடகர்: ராகுல் தேஷ்பாண்டே (மி வசந்த்ராவ் – மராத்தி)

பின்னணி பாடகி: நஞ்சம்மா (அய்யப்பனும் கோஷியும்–மலையாளம்)

குழந்தை நட்சத்திரம்: அனிஷ் மங்கேஷ் கோசவி, அகங்க்ஷா பிங்க்ளே, திவ்யேண் இந்துல்கர்

குழந்தைகள் படம்:சுமி (மராத்தி)

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான சிறந்த படம்: தலேதண்டா (கன்னடம்)

### தமிழ் திரையுலகுக்கு 10 தேசிய விருதுகள்

‘சூரரைப் போற்று’ படம், சிறந்த நடிகர், நடிகை, சிறந்த படம், திரைக்கதை, பின்னணி இசை என 5 விருதுகளை பெற்றுள்ளது. ‘சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்’ படம், தமிழில் சிறந்த படம், துணை நடிகை, படத்தொகுப்பு என 3 விருதுகளும், ‘மண்டேலா’ படம், சிறந்த வசனம், புதுமுக இயக்குனர் என 2 விருதுகளும் பெற்றுள்ளன. எனவே, தமிழ் திரையுலகுக்கு 10 தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.




சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடந்த தமிழ்நாடு நாள் விழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் வழங்கினார். அருகில் அமைச்சர்கள் எ.வ.வேலு, சிவ.வீ.மெய்யநாதன், மா.மதிவேந்தன் மற்றும் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உள்ளனர்.

# 44–வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஏற்பாடுகள்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சென்னை, ஜுலை 23–

மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள 44–வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஏற்பாடுகளுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். அங்கு மேம்படுத்தப்படும் வசதிகள் பற்றி அமைச்சர்கள் விளக்கம் அளித்தனர்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (22–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், மாமல்லபுரத்தில் 28.7.2022 முதல் 10.8.2022 வரை நடைபெறவுள்ள 44–வது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சர்வதேச செஸ் விளையாட்டு வீரர்கள் வருகை குறித்த விவரங்கள், விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், தங்குமிட வசதிகள், தொடக்க விழா மற்றும் நிறைவு விழா ஏற்பாடுகள், அழைக்கப்படும் முக்கிய அழைப்பாளர்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகள், செஸ் ஒலிம்பியாட் தீபம் உள்ளிட்டவை குறித்து முதலமைச்சர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சென்னை விமான நிலையத்தில் விளையாட்டு வீரர்களுக்காக ஏற்படுத்தப்பட்டு வரும் வசதிகள் குறித்து நேரில் ஆய்வு செய்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, அதுகுறித்த விவரங்களை முதலமைச்சரிடம் எடுத்துரைத்தார்.

44–வது செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழா நடைபெறும் நேரு உள் விளையாட்டரங்கம், போட்டிகள் நடைபெறும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மெய்யநாதன் எடுத்துரைத்தார்.

சுற்றுலாத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை நிகழ்ச்சிகள், பேருந்து வசதிகள் உள்ளிட்டவை குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் விளக்கினார். அதுமட்டுமின்றி, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு 28–ந் தேதி அன்று உள்ளூர் விடுமுறை அறிவிப்பது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இச்சதுரங்கப் போட்டி குறித்து உலகெங்கும் உள்ள சதுரங்க ஆர்வலர்கள், போட்டியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தகவல்கள் பெறும் வகையில் பிரத்யேகமாக ஒரு இணையதளமும், செயலியும் உருவாக்கப்பட்டு வரும் விவரங்கள் குறித்து முதலமைச்சர் கேட்டறிந்தார்.

44–வது செஸ் ஒலிம்பியாட் போட்டியினை சிறப்பாக நடத்திடும் வகையில், பல்வேறு நாடுகளிலிருந்து வருகை தரும் போட்டியாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் எவ்வித குறைபாடுமின்றி மேற்கொள்ள வேண்டுமென்றும், போட்டி நடைபெறும் மாமல்லபுரத்திற்கு தேவையான போக்குவரத்து வசதியும், பார்வையாளர்கள் எவ்வித சிரமமின்றி போட்டியினை காண்பதற்கு தேவையான வசதிகளையும் செய்திட வேண்டுமென்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா,

செஸ் ஒலிம்பியாட் சிறப்பு அலுவலர் தாரேஸ் அகமது, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வீ.ப. ஜெயசீலன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை செயல் அலுவலர் கே.பி. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வருமான வரி தாக்கலுக்கான காலக்கெடு நீட்டிப்பு இல்லை: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஜுலை.23

2021–22ம் நிதியாண்டுக்கான வருமான வரித்தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் வருகிற 31ந்தேதி ஆகும். இதில் கடந்த 20ந்தேதி வரை 2.3 கோடி வருமான வரித்தாக்கல் நடந்துள்ளது.

கொரோனா காரணமாக வருமான வரித்தாக்கல் செய்ய கடந்த 2 ஆண்டுகள் காலக்கெடு நீட்டிக்கப்பட்டது. அந்தவகையில் 2020–21ம் ஆண்டுக்கான வருமான வரித்தாக்கல் செய்ய கடந்த டிசம்பர் வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டு இருந்தது. இதில் சுமார் 5.89 கோடி வரித் தாக்கல் நடந்திருந்தது.

இந்த நிலையில் 2021–22ம் ஆண்டுக்கான வருமான வரித்தாக்கலுக்கான காலக்கெடு நீட்டிப்பதற்கான பரிசீலனை எதுவும் நடைபெறவில்லை என வருமான வரித்துறை கூறியுள்ளது.

இது தொடர்பாக வருவாய்த்துறை செயலாளர் ஒருவர் கூறுகையில், ‘வழக்கம் போல இந்த ஆண்டும் வருமான வரித் தாக்கலுக்கான காலக்கெடு நீட்டிக்கப்படும் என மக்கள் நினைக்கின்றனர். அதனால் தொடக்கத்தில் ஒரு மந்தநிலை காணப்பட்டது. ஆனால் தற்போது இது நாள்தோறும் அதிகரித்து வருகிறது’ என்று தெரிவித்தார்.

வருமான வரித்தாக்கலுக்கான காலக்கெடுவை நீட்டிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை எனக்கூறிய அவர், தற்போது நாளொன்றுக்கு 20 லட்சம் வரை வரித்தாக்கல் செய்வதாகவும், 31ந்தேதிக்குள் மக்கள் வரித் தாக்கலை முடித்துவிடுவர் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

# தமிழகத்தில் நேற்று 2,033 பேருக்கு கொரோனா

சென்னை, ஜுலை.23

தமிழகத்தில் நேற்று புதிதாக 1,168 ஆண்கள், 865 பெண்கள் என மொத்தம் 2 ஆயிரத்து 33 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 466 பேர், செங்கல்பட்டில் 217 பேர், கோவையில் 187 பேர் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் தொற்று பாதிப்பு பதிவாகி உள்ளது. ஆஸ்பத்திரியில் 791 பேர் மட்டும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். விழுப்புரத்தில் கொரோனா பாதிக்கப்பட்ட 84 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். தமிழகத்தில் கொரோனா பாதிப்புக்குள்ளாகி 16 ஆயிரத்து 153 பேர் சிகிச்சையில் உள்ளனர். தொடர்ந்து 7வது நாளாக தமிழகத்தில் பாதிப்பு குறைந்து வருகிறது.


## இந்த் பாங்க் ஹவுசிங் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 480, அண்ணா சாலை. III தளம் நந்தனம், சென்னை 600 035
ஈமெயில் : indhouse@indbankhousing.com இணையதளம் : www.indbankhousing.com
பதிவு எண்: L65922TN1991PLC020219 தொலைபேசி எண்: 2432 9235

**30.06.2022 அன்று முடிவுறும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

| வ எண் | விவரங்கள் | மூன்று மாதங்கள் இறுதியில் | நடப்பு ஆண்டு தொடக்கம் முதல் கீழ்கண்ட தேதி வரை | முடிந்த முந்தைய ஆண்டில் அன்று இதே மூன்று மாதங்கள் முடிவில் |
|---|---|---|---|---|
| | | 30.06.2022 | 30.06.2022 | 30.06.2021 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது |
| | | ரூ லட்சத்தில் | | |
| 1. | நடைமுறை வருவாய் | 5.10 | 5.10 | 6.39 |
| 2. | வரி, விதிவிலக்கான வகைகள் மற்றும் வகைகளுக்கு முன்னரான நிகர இலாபம் / (நட்டம்) | -8.51 | -8.51 | -6.36 |
| 3. | விதிவிலக்கான வகைகள் மற்றும் அசாதாரண வகைகளுக்கு பின்னரான மற்றும் வரிக்கு முன்னரான நிகர இலாபம் / (நட்டம்) | -8.51 | -8.51 | -6.36 |
| 4. | வரி, விதிவிலக்கான வகைகள் மற்றும் அசாதாரண வகைகளுக்கு பின்னரான நிகர இலாபம் / (நட்டம்) | -8.51 | -8.51 | -6.36 |
| 5. | இக்காலத்திற்கான விரிவான வருவாய் (இக்காலத்திற்கான வரிக்கு பின்னரான இலாபம் / (நட்டம்) உள்பட) | -8.53 | -8.53 | -6.36 |
| 6. | செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | 1000.00 | 1000.00 | 1000.00 |
| 7. | மறுமதிப்பு காப்பு நிதியை சேர்க்காத காப்பு நிதிகள் முந்தைய நிதி ஆண்டு (இருப்புநிலைக் குறிப்பின் படி) | 583.17 | 583.17 | 583.17 |
| 8. | ஒரு பங்கின் வருவாய் (ஒன்று ரூ 10/-) (தொடரும் மற்றும் தொடரா செயல்பாடுகள் மூலம்) | | | |
| | 1. அடிப்படை | -0.09 | -0.09 | -0.06 |
| | 2. நீர்த்த | -0.09 | -0.09 | -0.06 |

**குறிப்பு:** மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், செபி (பட்டியல் மற்றும் பிற வெளிப்படுதல் தேவைகள்) கட்டுப்பாடு 33ன்கீழ் உள்ள ஒழுங்கு விதிகள் 2015ன்கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்த விரிவான வடிவத்தின் ஒரு சுருக்கமாகும். விரிவான நிதிநிலை முடிவுகள் பங்குச் சந்தைகளின் இணையதளம் **www.bseindia.com (BSE)** மற்றும் நிறுவனத்தின் இணையதளம் **www.indbankhousing.com** ஆகியவற்றில் உள்ளன.

இடம் : சென்னை
தேதி : 22.07.2022

மேலாண்மை இயக்குநர்
தலைமை நிதி அதிகாரி



**BEFORE THE HON'BLE XVIII ASST. CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S.Nos. 1643 of 2013**

A.M.Zaffrullah Khan
S/o Abdul Majith Khan
Rep. by Power of Attorney,
Mrs.Dilshad Khan,
Residing at No.418-A,
Malar Colony, 19th Main Road,
Anna Nagar West,
Chennai- 600040 ...Plaintiff

Vs

1. M. Marimuthu
S/o Mr.Murugesan,
Door No.1160, Bhakthavatchalam Colony, Elango Nagar,
Chennai- 600039
2. K.P.Gandhi
S/o Kaliaperumal,
No.527, 1st Block,
4th Street, Anna Nagar West,
Chennai - 600040
(2nd Defendant impleaded as per order in I.A.No.702 of 2017 dated 19.12.2017)
3. Mukil Raja s/o M. Marimuthu,
Door No.1160, Bhakthavatchalam Colony, Elango Nagar,
Chennai- 600039
(3rd Defendant impleaded as per order in I.A.No.9005 of 2013 dated 23.01.2018)
... Defendants

NOTICE

Take Notice that in the above suit, the Learned XVIII Asst. City Civil Judge was pleased to order Notice to the 3rd Defendant, Mr.MUKIL RAJA by Paper Publication returnable by 29.07.2022. Kindly therefore take Notice of this Publication and be present before the Hon'ble Court on the next hearing on 29.07.2022 at 10.30 AM, either in person or through a Pleader, failing which the case will be heard and decided in your absence.

C.S.KIRAN
Counsel for Plaintiff



## ஓஸ்வால் மினரல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 8/11, போலீஸ் ஸ்டேஷன் ரோடு, பல்லாவரம், சென்னை – 600 043.
கார்ப்பரேட் அலுவலகம்: ''ஓஸ்வால்'ஸ்'', 1034, 2வது தளம், டாக்டர் ராஜ்குமார் சாலை, 4வது பிளாக், ராஜாஜி நகர், பெங்களூர் – 560 010. CIN: L30006TN1996PLC035973.

**அறிவிப்பு**

அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் வாக்குச் சீட்டு மூலம் மட்டுமே வாக்களித்து பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக நிறுவனத்தின் 26வது வருடாந்திர பொதுக் கூட்டம் திங்கட்கிழமை, ஆகஸ்ட் 22, 2022 அன்று நண்பகல் 1.00 மணிக்கு பதிவு அலுவலகம்: 8/11, போலீஸ் ஸ்டேஷன் ரோடு, பல்லாவரம், சென்னை – 600 043–ல் முறையே மே 05, 2022 மற்றும் மே 13, 2022 தேதியிட்ட எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைக்கு இணங்க நடைபெற உள்ளது. அதற்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பும் பணியை நிறுவனம் ஜுலை 22, 2022, வெள்ளிக்கிழமை அன்று நிறைவு செய்துள்ளது என்று உறுப்பினர்களுக்கு நிறுவனம் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறது.

**நிறுவனத்தின் பங்குகளை மின்னணு வடிவில் வைத்துள்ள பங்குதாரர்கள், தங்கள் முகவரி, மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண், வங்கி விவரங்கள் உள்ளிட்டவற்றை பதிவு செய்ய/புதுப்பிக்கவில்லை என்றால், அவர்கள் முறையே அந்தந்த வைப்பு பங்கேற்பாளர்/தரகரை தொடர்பு கொண்டு அவற்றை அவர்களின் மின்னணு கணக்கில் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**நிறுவனத்தின் பங்குகளை காகித வடிவில் வைத்துள்ள பங்குதாரர்கள், தங்கள் முகவரி, மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண், வங்கி விவரங்கள் உள்ளிட்டவற்றை பதிவு செய்ய/புதுப்பிக்கவில்லை என்றால், அது சம்பந்தமான தேவையான விவரங்களை அதனுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

ஆகஸ்ட் 15, 2022 அன்று (கட்ஆஃப் தேதி) உறுப்பினர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட பங்குகளின் மீது வாக்குரிமை கணக்கிடப்படும். கட்ஆஃப் தேதியின்படி உறுப்பினர்களின் பதிவேட்டிலோ அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிக்கும் வசதியைப் பெற உரிமை உண்டு.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு ஆகஸ்ட் 19, 2022 அன்று காலை 9 மணிக்கு துவங்கி ஆகஸ்ட் 21, 2022 அன்று மாலை 5.00 மணிக்கு நிறைவடைகிறது.

வருடாந்திர அறிக்கை மற்றும் 26வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.oswalminerals.com மற்றும் மின்னணு வாக்களிப்பு இணையதளமான CDSL–ன் www.evotingindia.com–ல் கிடைக்கும்.

நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் ஆகஸ்ட் 16, 2022 முதல் ஆகஸ்ட் 22, 2022 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும். அறிவிப்பை அனுப்பிய பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதி அதாவது ஆகஸ்ட் 15, 2022–ன்படி பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் helpdesk.evotina@cdsl.com அல்லது cameo@cameoindia.com என்ற முகவரியில் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்.

மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால், www.evotingindia.com–ல் உதவிப் பிரிவின் கீழ் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQகள்") மற்றும் மின்னணு வாக்களிப்பு கையேட்டைப் பார்க்கவும் அல்லது helpdesk.evotinq@cdsfindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண். 1800225533–ல் தொடர்பு கொள்ளவும்.

குழு உத்தரவுப்படி
ஒப்பம்/–
மிலன் மரோட்டி
நிறுவனச் செயலாளர்

இடம் : பெங்களூரு
தேதி : 22.07.2022



**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதலேற்பு மனு எண்.756/2021**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் 39/1925 தொடர்பான மனுவில் 16.10.2020 அன்று இறந்து போன சு.ஸ்ரீதர் அவர்களின் சொத்துக்கள் தொடர்பான மனு

திருமதி. எஸ். சம்பூர்ணம்,
த/பெ. மறைந்த திரு. ஆர்.எஸ். வெங்கடராமன்
பிளாட் நெ.A3, லட்சுமி நாராயண அப்பார்ட்மெண்ட்ஸ்,
கதவு நெ.11, குமரப்பா தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை–600034 –மனுதாரர்

சென்னை–600092, விருகம்பாக்கம், ஆற்காடு சாலை, கதவு நெ.134A, ஒய். எஸ். என்கிளேவ், பிளாக்–II, பிளாட் எண்.K8 என்ற முகவரியில் வசித்து வந்து 16.10.2020 அன்று இறந்து போன சு.ஸ்ரீதர் அவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் தொடர்பாக ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் நிர்வாக சான்றிதழ் வழங்குப்படுவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 20.09.2022 அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகியோ அல்லது jroriginalsidemhc@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியிலோ ஆட்சேபணை ஏதேனும் இருந்தால் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2022ம் ஆண்டு ஜுலை மாதம் 14ந் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

**பா.தினேஷ்குமார், பி.கவிதா**
**K.ஜோதி**
**மனுதாரரின் வழக்கறிஞர்கள்**
**நெ.178, ராமா தெரு**
**நுங்கம்பாக்கம், சென்னை– 600 034**

**உப்பலபு சுரேஷ்குமார்**
**உதவி பதிவாளர்**
**முதலேற்பு பிரிவு– 1**
**உயர்நீதிமன்றம்**
**சென்னை– 600 104**



**சென்னை உயர்நீதிமன்றம்**
**( உயில் மற்றும் உயில் இல்லாத ஆள்வரை )**
**முதல் ஏற்பு மனு எண்: 57 of 2022**

இந்திய வாரிசு உரிமை சட்டம் 1925 (XXXIX OF 1925) தொடர்பான மனுவில் 17.08.2020 அன்று இறந்து போன Dr. சாமுவேல் சுந்தர்சிங் செல்லையா (a) எஸ். எஸ். செல்லையா கடைசி உயிர் தொடர்பான மனு

ஜோஷுவா செல்லையா ...... மனுதாரர்

எதிர்

Dr. ஆபிரகாம் செல்லையா மற்றும் இருவர் ... எதிர்மனுதாரர்

பெறுநர்:
1. ரோஜா,
என் 15, ஷெனாய் லேன், நுங்கம்பாக்கம், சென்னை 600034
2. மோன் சிங்,
என் 15, ஷெனாய் லேன், நுங்கம்பாக்கம், சென்னை 600034

காலஞ்சென்ற டாக்டர் சாம்யேல் சுந்தர் சிங் செல்லைய்யா என்கிற S.S.செல்லையா அவர்களின் சொத்துக்களை அவர் எழுதிவைத்த உயில் பத்திரத்தின்படி செயல்படுத்தவும், நீதிமன்றத்திலிருந்து நிர்வாக உரிமை பெறவும் மேலே குறிப்பிட்ட பெயரை உடைய மனுதாரர் அசல் மனு எண்.57/2022 சமர்ப்பிததிருக்கிறார். இந்த விஷயம் கடைசியாக மாஸ்டர் நீதிமன்றம் முன்பு 6.7.2022 அன்று பார்வைக்கு வந்தபோது கனம் நீதிமன்றத்தார் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுக்கு மாற்றுமுறை சார்வு செய்ததற்கு உத்தரவிட்டுள்ளதால் இந்த விஷயம் குறித்து செய்தித் தாள்களில் பிரசுரிக்கப்பட்டு 23.8.2022 தேதிக்குள் எவருக்கும் ஆட்சேபணை இருப்பின் அவற்றை நீதிமன்றத்தில் தரலாம் என்ற அறிவிப்பு தரப்பட்டுள்ளது. அகவே உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் கனம் மாஸ்டர் நீதிமனறத்தார் முன்பு ஆகஸ்டு மாதம் 23ந் தேதி 2022 அன்று காலை 10.30 மணியளவில் நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி மனுதாரருக்கு நிர்வாக உரிமை தருவது பற்றி உங்கள் ஆட்சேபணையை தெரிவிக்கலாம். அவ்வாறு நீங்கள் ஆஜராகாவிட்டால் மனு விசாரணை மேற்கொள்ளப்பட்டு உங்களுடைய வருகை இல்லாமலேயே முடிவு செய்யப்படுவிடும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறீர்கள்.

M/s. ரேங்க் அசோசியேட்ஸ்,
வழக்கறிஞர்கள்,
என் 25, பாஸுல்லாஹ் சாலை, டி நகர், சென்னை 600017
மனுதாரரின் வழக்கறிஞர்



Redington
SEAMLESS PARTNERSHIPS

## ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம்:சென்டர் பாயிண்ட், மனை எண்.11 (SP),
திரு.வி.க. தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032.
CIN: L52599TN1961PLC028758
Tel No: +91-44-42243353 Fax No: +91-44-22253799
Email: investors@redington.co.in Website: www.redingtongroup.com

**29வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்புக்கான விளக்க அறிக்கையின் பிற்சேர்க்கை**

ஜுலை 27, 2022, புதன்கிழமை, அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி காணொளி காட்சி('VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெற உள்ள 29வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) தொடர்பான அறிவிப்பை இது குறிக்கிறது.

செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015–ன் விதிமுறைகள் 36 (5)–ன் கீழ் நிறுவனம் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் இணைக்கப்பட்ட விளக்க அறிக்கையில் அயிட்டம் எண். 5–ல் இந்த பிற்சேர்க்கை மூலம் சட்டப்பூர்வ தணிக்கையாளர் நியமனம் குறித்து தேவைப்படும் கூடுதல் விவரங்களை அளித்துள்ளது.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிப்புடன் வெளியிடப்பட்ட விளக்க அறிக்கையின் தொடர்ச்சியாக இந்த பிற்சேர்க்கை வெளியிடப்படுகிறது. இதை ஜுலை 5, 2022 அன்று பங்குதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் ஏற்கனவே அனுப்பப்பட்ட வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் சேர்த்து படிக்க வேண்டும். இந்த பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பின் மற்ற அனைத்து உள்ளடக்கங்களும், மாறாமல் இருக்கும். இது கம்பெனியின் இணையதளம் https://redingtongroup.com/wp-content/uploads/2022/07/noticeaddendum.pdf மற்றும் பங்கு சந்தையின் இணையதளங்கள் அதாவது www.bseindia.com மற்றும் www.nseindia.com–ல் கிடைக்கும்.

**ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்டிற்காக**
**எம் முத்துக்குமாரசாமி**
**கம்பெனி செயலாளர்**

**தேதி: 22.07.2022**
**இடம்: சென்னை**



## பொது அறிவிப்பு

1. நியோஜின் பின்டெக் லிமிடெட் (''நிறுவனம்'') நிறுவனங்கள் சட்டம், 1956–ன் கீழ் பிப்ரவரி 1, 1988 அன்று துவக்கப்பட்டது. எம்ஜஜி 944, கீழ் தளம், டிஎன்எச்பி காலனி, முதல் பிரதான சாலை, வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு – 600 042 என்ற முகவரி பதிவு அலுவலகம் கொண்டு செயல்படும் இந்நிறுவனம் ஏப்ரல் 17, 2021 தேதியிட்ட எண். B-07.00874ஐக் கொண்ட பதிவுச் சான்றிதழின் அடிப்படையில் வங்கி அல்லாத நிதி நிறுவனமாக (NBFC) இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிறுவனம் எந்தவொரு பொது வைப்புத்தொகையும் பெறவில்லை.

2. நிறுவனத்தின் தற்போதைய புரோமோட்டர்களான இன்பர்மேஷன் இன்டர்பேஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் ("IIIPL") திரு. அமித் விஜய் ராஜ்பால் மற்றும் திரு. மகரந்த் ராம் படங்கர் ஆகியோர் முறையே ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள 3,44,35,567 (36.51%), 29,62,202 (3.14%) மற்றும் 4,561 (புறக்கணிக்கத்தக்கது) முழுவதும் செலுத்தப்பட்ட சம பங்குகளை வைத்துள்ளனர்.

3. ஒருங்கிணைப்பு திட்டத்தின்படி, இன்பர்மேஷன் இன்டர்பேஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (''மாற்றப்படும் நிறுவனம்'') மற்றும் முறையே அதன் பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்கள் (''திட்டம்'') நியோஜின் பின்டெக் லிமிடெட் (''மாற்றிக்கொள்ளும் நிறுவனம்'') உடன் ஒருங்கிணைக்கப்படுவர். இதை கருத்தில் கொண்டு, மாற்றிக் கொள்ளும் நிறுவனம், மாற்றப்படும் நிறுவனத்தின் சம பங்குதாரர்களுக்கு, யாருடைய பெயர் உறுப்பினர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, மாற்றப்படும் நிறுவனத்தின் அந்த பங்குதாரர்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் விகிதத்தில் மாற்றிக் கொள்ளும் நிறுவனம் ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள 3,44,35,567 (மூன்று கோடி நாற்பத்து நான்கு லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து ஐந்நூற்று அறுபத்தேழு) முழுமையாக செலுத்தப்பட்ட சம பங்குகளை வெளியிடும் மற்றும் ஒதுக்கீடு செய்யும்.

4. மேற்கண்ட பரிவர்த்தனை முடிவுகளின்படி, IIIPL புரோமோட்டர்களான திரு. அமித் விஜய் ராஜ்பால், திரு. மகரந்த் ராம் படங்கர் மற்றும் திருமதி. ஜெயஸ்ரீ படங்கர் ஆகியோர் முறையே ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள 2,58,04,344 (27.36%), 43,30,032 (4.59%) மற்றும் 72,67,954 (7.71%) முழுமையாக செலுத்தப்பட்ட சம பங்குகளை நேரடியாக பெற்று அத்துடன் நிறுவனத்தையும் நிர்வகிப்பார்கள்.

நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் முன்மொழியப்பட்ட மாற்றத்தால் யாருடைய நலனும் பாதிக்கப்படக்கூடிய நபர், சம்பந்தப்பட்ட துறையின் பிராந்திய அலுவலகம், வங்கி அல்லாத மேற்பார்வை பிரிவு, ரிசர்வ் வங்கி, சென்னை மற்றும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு இது தொடர்பான நிலை மற்றும் ஆட்சேபனைக்கான காரணம் ஆகியவற்றை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். நிறுவனம் நிர்வாகத்தை மாற்றுவதற்கான முன் அனுமதியை ஜுலை 23, 2020 தேதியிட்ட மின்னஞ்சல் மூலம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் இருந்து ஏற்கனவே பெற்றுள்ளது.

ஜுலை 09,2015 தேதியிட்ட RBI சுற்றறிக்கை DNBR, (PD) CC, எண்.065/03.10.001/2015-16 மற்றும் பிற தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்க இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. இந்த பொது அறிவிப்பை IIIPL நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அமித் விஜய் ராஜ்பால், திரு. மகரந்த் ராம் படங்கர் மற்றும் திருமதி. ஜெய்ஸ்ரீ படங்கர் ஆகியோர் இணைந்து வெளியிடுகின்றனர்.

**நியோஜின் பின்டெக் லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/–**
**பெயர் : தஷ்விந்தர் சிங்**
**பதவி : நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி**
**இன்பர்மேஷன் இன்டர்பேஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/–**
**பெயர் : மகரந்த் படங்கர்**
**பதவி : இயக்குனர்**

| ஒப்பம்/– | ஒப்பம்/– | ஒப்பம்/– |
|---|---|---|
| (அமித் விஜய் ராஜ்பால்) | (மகரந்த் ராம் படங்கர்) | (ஜெயஸ்ரீ படங்கர்) |

**இடம் : மும்பை**
**தேதி : ஜுலை 22, 2022**